
SAINT
ALPHEGE

# ஏப்ரல் 19
## *புனித எல்பீஜ் (-1012)*

இவர் சிறுவயதிலேயே உலதகத்தைத் துறந்து இங்கிலாந்திலுள்ள ஒரு சந்நியாச மடத்தில் சேர்ந்தார். சில ஆண்டுகளுக்குப்பின் காட்டுக்குப்போய் ஒரு குடிசையில் தப வாழ்வு நடத்தினார். 1006-ம் ஆண்டில் காந்திபாரி பேராயராக நியமனம் பெற்றார். இவரது காலத்தில் எதிரிகள் படையெடுத்து வந்து நாட்டைப் பாழாக்கினார்கள். அப்பொழுது நாட்டை ஆண்டு வந்த அரசன் பலவீனன். சண்டை நடந்ததால் மக்கள் அநேகர் உயிரிழந்தனர். சண்டை நடந்த இடத்திற்கு பேராயர் விரைந்து சென்று “என் மக்களைக் கொல்ல வேண்டாம், என்னைக் கொல்லுங்கள்” என்றார். எதிரிகள் மேற்றிராசனக் கோயிலை எரித்து, பேராயரை பல மாதங்களாக சிறையில் வைத்து குருரமாக உபாதித்தார்கள். மீட்புக் கிரயமாக கோவில் பணத்தை இவர்கள் பயன்படுத்தியிருந்தால் விடுதலை பெற்றிருக்கலாம். எனினும் இவர் இதை விரும்பவில்லை. தம்மை வதைத்துக் கொன்றவர்களுக்காக செபித்துக்கொண்டே இறந்தார்.

**சிந்தனை:**

நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக தன் உயிரைக் கொடுக்கிறான். இதற்கு இந்த புனிதர் சிறந்த சாட்சி.

**செபம்:**

ஆண்டவரே, ஆர்வம் நிறைந்த ஆயர்களை திருச்சபைக்கு நிரம்பத் தாரும்.